யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 100 பிரசோற்பத்தி மாசி 23 (06.03 1992) வெள்ளி


## இராணுவப் பேச்சாளர் தகவல்

### சீன டாங்கிகளின் திறன் தாக்குதலுக்குசிறந்தவையாம்

வன்னிவிக்ரம இராணுவ நடவடிக்கை மூலம் சீனா வில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரி-85 டாங்கிகள் தாக்குதலுக்கு சிறந்தவையாக இருப் பதை அறிந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க நேற்றுத் தெரிவித்தார். புலிகளுக்கு எதிராக எந்த இடங்களிலும் இந்த சீனரக டாங்கிகளை பயன்படுத்த முடியும் என்பதை வவுனியா நடவடிக்கை எடுத்துக் காட்டியதாக முன சிங்க குறிப்பிட்டதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

—06 ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவில் அதிகாலை மோதல்

# படையினர் கடும் ஷெல் தாக்குதல்

## கைதான மீனவர்கள் மீது விசாரணைகள் ஆரம்பம்

குடாக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது இராணுவத் தினரால் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 121 பேரின் பெயர் விவரங் கள் அடங்கிய பட்டியல் ஒன்று அரச அதிபரால் வெளி யிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான விசாரணை கள் தற்போது நடைபெற்று வருவதாகவும் வெகு விரை வில் இவர்கள் விடுதலை செய் யப்படலாம் என எதிர்பார்ப் பதாகவும் செயலக வட்டா ரங்கள் தெரிவித்தன.

(பெயர் விவரங்கள் உள்ளே)

04 47

## வெற்றிலைக்கேணி கடலில் இருந்தும் பீரங்கிச் சூடு

நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை ஆனையிறவு மற்றும் வெற்றிலைக்கேணி படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை மேற் கொண்டனர் முன்னதாக இப்படையினர் மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல்களை மேற்கொண்டனர். இம்மோதலில் படையினர் தரப் பில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும், வெற்றி லைக்கேணியில் தங்கியுள்ள படையினரும் நேற்று கடும் ஷெல் தாக்குதல்களை மேற் கொண்டனர்.

வெற்றிலைக்கேணி கடற் பரப்பிலிருந்து பீரங்கிப்படகு களும் தாக்குதல் நடத்திய வண்ணமிருந்தன.

ஷெல்கள் தட்டுவன்கொட்டி இயக்கச்சி மற்றும் ஊரியான் பகுதிகளில் வீழ்ந்து வெடித் தன.

இதேவேளை வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதி யில் நேற்று விமானத்தாக்கு தலும் நடைபெற்றதாக கூறப் படுகிறது.

### புலிகள் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமின் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகளும் நேற்று அதிகாலை தாக்குதல் நடத் தியதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் படையி னர் தரப்பில் சேதம் ஏற்பட் டுள்ளதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன

### வெற்றிலைக்கேணியிலும் மோதல்

இதனிடையே வெற்றிலைக் கேணி படையினருக்கும் விடு தலைப்புலிகளுக்கும் இடை யேயும் மோதல்கள் இடம் பெற்றதாக மற்றுமோர் செய்தி தெரிவிக்கிறது. (07

## ஸ்ரீலங்காவிற்கு 40 கோடி ரூபா சீனா நிதியுதவி வழங்கும்

ஸ்ரீலங்காவுக்கு 40 கோடி 55 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்க சீனா இணக்கம் தெரி வித்துள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ள சீன - ஸ்ரீலங்கா வர்த்தகக் கூட்டுக் குழுக் கூட்டத்திலேயே இந்த உதவி வழங்கப்படவுள்ளது

இந்த நிதியுதவிக்கு வட்டி அறவிடப்படமாட்டாது என வும், 10 ஆண்டு கால சலுகை வழங்கப்படும் எனவும் தெரி விக்கப்படுகிறது.

## வன்னிவிக்ரம பூர்த்தியாம் இராணுவ அதிகாரி அறிவிப்பு

ஒபரேஷன் வன்னி விக்ரம III நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக நேற்று இராணுவப் பேச்சா ளர் கேணல் சரத் முனசிங்க உத்தியோக பூர்வமாக அறி வித்தார்.

இந்நடவடிக்கையில் இரு சிப்பாய்களே பலியானதாக வும் முனசிங்க அப்போது தெரிவித்தார்.

## வவுனியாவில் இடம்பெயர்ந்தோர் சொந்த இடம் திரும்பினர்

வவுனியாப் பகுதிகளான பூவரசங்குளம், ஈச்சங்குளம், சாளம்பைக்குளம், தேவர் குளம், காக்கையான் குளம். சின்னத்தம்பனை, பெரியதம் பனை, புதுக்குளம், மருக் காரம்பளை, வன்னியாகுளம், கட்டையர்குளம் கொந்தக் காரன்குளம் ஆகியபகுதிகளில் கடந்த 10 நாள்களாக மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது அப் பகுதியிலிருந்து வெளியேறி பிற இடங்களுக்குச் சென்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று சொந்த இடங்களுக்கு திரும்பிச்சென்றதாகத் தெரிய வருகிறது.

இப்பகுதியிலிருந்து 5000க்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். (07)

## உலகக் கோப்பை கிரிக்கெட்

### தென்னாபிரிக்கா, இங்கிலாந்து நேற்று வெற்றிபெற்றன

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நியூசிலாந்தில் நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்கா மேற்சிந்திய தீவுகளை 64 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 50 ஓவர் களில் 8 விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்டங்களைப் பெற் றது. மேற்கிந்திய தீவுகள் 34 4 ஓவர்களில் சகல விக் கெட்டுகளையும் இழந்து 136 ஓட்டங்களையே பெற்றது.

அவுஸ்திரேலியாவில் நடை பெற்ற போட்டியில் இங்கி லாந்து அவுஸ்திரேலியாவை 8 விக்கெட்டுக்களால் தோற் கடித்தது

அவுஸ்திரேலியா துடுப் பெடுத்தாடி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து 40, 5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 172 ஓட்டங்களைப் பெற்றது.

(16)

## பருத்தித்துறை மீனவர் மீது கடற்படை பீரங்கித் தாக்கு

பருத்தித்துறை கடற் பிராந்தியத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த கடற் படையினர் இன்று நண்பகல் 12 மணிக்கு மீன் பிடித் துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மத்தியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீன வர்கள் ஒருவாறு கரைசேர்ந் தனர்.

இதேவேளை பருத்தித் துறை துறைமுகத்தில் குமண கப்பலிலிருந்து உணவுப் பொருள்களும் இறக்கப்பட் டுக்கொண்டிருந்தது. (08)

## அராலிப் பகுதியிலிருந்தும்

### இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் வீடு திரும்பினர்

நேற்றுமுன்தினம் அதிகாலை அராலிப் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட ஷெல் தாக் குதலின் பின்னர் அப்பகுதி யில் ஏற்பட்ட அச்ச உணர்வு காரணமாக இடம்பெயர்ந்து பிற இடங்களை நோக்கிச் சென்ற மக்கள் மீண்டும் அப் பகுதியில் குடியிருக்கச்சென் றுள்ளனர்.

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதியில் தங்கியிருந்த மக் களே மீளவும் திரும்பிச் சென் றதைக் காணக்கூடியதாக இருந்தது. (07)

## குடாநாட்டில் திடீரென கடும் பனி மூட்டம்

தென்மராட்சியில் சிலபகுதி களிலும் நேற்றும் நேற்றுமுன் தினமும் காலையில் கடும் பனி மூட்டம் காணப்பட்டது.

மலையகத்தில் இருப்பது போல் வீதியில் சில யார் முன் னால் செல்பவர்களைக் கூட அடையாளம் காணமுடியாத வாறு சமீபகாலத்தில் முதல் தடவையாக இங்கு அதிகள வான பனி மூட்டம் காணப் பட்டதை அவதானிக்க முடிந் தது.

இதேபோன்று அதிகளவான பனி மூட்டம் வடமராட்சியின் சில பகுதிகளிலும் காணப்பட் டது.

இதேவேளை சென்னை விமான நிலையத்தில் நேற் றுக்காலை 7மணிவரை வழ மைக்கு மாறாக அதிகளவில் பனிமூட்டம் காணப்பட்ட தால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டதாகவும் தெரி யவருகிறது. (04-15)

## வீடியோ மூலம் போர்க்கால கருத்தரங்கு

பருத்தித்துறை பகுதிகளில் வீடியோ திரைப்படம் மூலம் போர்க்காலக் கருத்தரங்கு கள் நடைபெற்று வருகின்றன,

இப் போர்க்கால கருத்த ரங்கு கிராமம் கிராமங்கள் தோறும்சனசமூக நிலையங்கள்

... 06 ஆம் பக்கம் பார்க்க

## எழுதுவினைஞர்பரீட்சைமுடிவுகள் கப்பலில் எடுத்து வரப்படுகிறது

கடந்தமாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அமைய எழுது வினைஞர் போட்டிப்பரீட் சைக்கான வினாத்தாள்கள் கொழும்புபில் திருத்தப்பட்டு முடிந்துவிட்டன:

இப் பரீட்சை முடிவுகள் கொழும்பிலிருந்து பருத்தித் துறைவரும் கப்பலில் வரவுள் ளதாகக் கொழும்புச் செய்தி கள் தெரிவிக்கின்றன. 06

## பெண்களின் வலை வீச்சு வல்லை கடற்பகுதியில்

வல்லை கடற் களப்புகளில் பெண்கள் வலைவீசி மீன்க ளைப் பிடிக்கின்றனர்.

தமது தேவைக்கும். மேல திகமானதை விற்பனை செய் வதற்குமே தாங்கள் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவ தாக அவர்கள் நமது நிருப ருக்குத் தெரிவித்தனர். (49)

நாதஸ்வர மேதைகளான இரு முதுபெருங் கலைஞர்கள்

மாவிட்டபுரம் எஸ். கே. இராசா, யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை

ஆகியோரின்

# பாராட்டுவிழா சிறப்பிதழ்

## நாதஸ்வர இசையின் பிதாமகர்கள்

திராவிட சமுதாயத்தின் ஒரு அங்கமாக விளங்கும் தமிழினத்தின் தனிப் பெருஞ் சொத்து கர்நாடக சாஸ்திரீய இசை.

சாதாரண மக்களும் இந்த இசையை விரும்பிச் சுவைக்கும் வண்ணம் காலங்காலமாக இதை வளர்த்து வருபவர்கள் நாதஸ்வர, தவில் வித்துவான்களாவர்.

ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் இசைவேளாளர்கள் என அழைக்கப்படும் இந்தக் கலைஞர்கள் ஈழத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் பகுதி யாழ்ப்பாணக் குடாநாடு ஆகும். இணுவில், மாவிட்டபுரம், அளவெட்டி, சாவகச்சேரி எனப் பல ஊர்களிலும் பரந்து வாழ்ந்து ஈழத்தின் பண்பாட்டுக்கு ஒரு முக்கிய தூணாகவும், அரணாகவும் வாழ்ந்து வரும் இச்சமுதாயத்தின் பணி ஒப்பற்றது.

இச்சமுதாயத்தில் இன்று வாழ்ந்துவரும் அதிமூத்த கலைஞர்களுள் மாவிட்டபுரம் எஸ். கே. இராசா அவர்களும் யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை அவர்களும் தனித்துவம் மிக்க முது பெருங் கலைஞர்களாவர்.

Fine arts என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நுண்கலைகளுள் Melody எனப்படும் இன்னிசை வகையைச் சார்ந்த எமது கர்நாடக சாஸ்திரீய இசைக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தந்தவர்கள் மாவிட்டபுரம் இராசா அவர்களும் யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை அவர்களுமாவர்.

★ நவாலியூர் நா. சச்சிதானந்தன் ★

தமிழன் எங்கிருந்தாலும் அவனது பண்பாடும், கலாசாரமும் ஒன்றே என்பதை மறந்து ஒரு காலகட்டத்தில் பதவியிலிருந்த அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவதற்காக ஈழத் தமிழர்களின் இசையான கர்நாடக இசை "நிபுணர்களால் நிபுணர்களுக்காகப் பாடப்படுவது; அது சாதாரண மக்களுக்கு விளங்காது" எனப் பேசியும், எழுதியும் வந்த பேரறிஞர் குழாமொன்று இன்று ஈழத்தின் அதிமுக்கிய கேந்திரங்களில் இருந்து கொண்டு கர்நாடக இசைக்குக் கட்டியங்கூறிக் கவிதை பாடவும், கர்நாடக இசை, நாட்டிய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கவும் அழைக்கப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் மக்கள் கலையாகி, சாதாரண மக்களின் இரத்தத்தில் ஊறிவிட்ட, நாதஸ்வர, தவில் இசையைப் பேணி வளர்த்த பெரியார்கள் கௌரவிக்கப்படுவது வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

இன்று ஈழத்தில் முன்னணியில் இருக்கும் பெரும்பாலான நாதஸ்வர வித்துவான்களுக்குக் குருவாக இவ்விரு கலைஞர்களும் இருந்திருக்கின்றனர்.

"எல்லோர்க்கும்ஒவ்வொன்றெளிது" என்பது பழமொழி

ஆயினும் யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை அவர்களுக்கு எல்லாமே எளிதானவை, கடம், நாதஸ்வரம், புல்லாங்குழல், வயலின், கஞ்சிரா, தவில் இவற்றுள் எதையுமே அவர் விட்டுவைக்கவில்லை. மணிஐயர் (பின்பு நல்லை ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்)

... 05 ஆம் பக்கம் பார்க்க



### இவர்கள் கலை தெய்வீகம்!

ஊதும் குழல்கொண் டுலகம் அளந்தபெரும்
மேதை இசையுலக வித்தகனன் - நாதஸ்வர
கானத்தால் முப்போதும் கந்தன் கழல்பணியும்
ஞானவிதன் மாவை இராசா!

* *

ஊனை உருக்கும்; உணர்வுள் கலந்துநிற்கும்;
வானதி தமராய் வாழ்விக்கும் - ஞானத்தன்
ஆறு முகம்பிள்ளை ஆண்டவன்றன் சந்நிதியில்
ஊதும் குழலின் ஒலி

- கவிஞர் சோ. ப.



## பாராட்டுப்பெறும் நாதஸ்வர பேரறிஞர்கள்

திருங்கசைவசமயத்திலே நடைபெறும் கிரியைகள் எல்லாவற்றிலும் மந்திரங்களோடு சரிசமமான இடம் வகிப்பது மங்கள வாத்தியம் எனக் கூறப்படும் நாதஸ்வர தவில் இசையாகும் கிட்டதட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பே இக் கலை தமிழ்நாட்டில் பெருகி வளர்ந்திருந்தது. முதலில் ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்களில் நாதஸ்வரத்தில் மல்லாரி, பிலவி, ரக்தி என்னும் பிரயோகங்கள் வெகுவாக கையாளப்பட்டுவந்தன. பிற்காலத்தில் கீர்த்தனைகள் அதற்குரிய ராக ஆலாபனைகள் ஸ்வர பிரயோகங்கள் எல்லாம் எடுத்தாளப்பட்டதோடு வீடுகளில் நடைபெறும் திருமணம் முதலிய மங்கல கிரியைகளிலும் முதலிடம் வகிக்கத்தொடங்கியது.

ஈழத்திருநாட்டில் இக்கலையை முழுமூச்சாகப் பேணி வளர்த்த பெருமை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரையே சாருகிறது "இசை வேளாளர்" எனப்போற்றப்படும் இவர்கள் இக்கலையை மிக நுணுக்கமாக பேணி வளர்த்து வந்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது இப்போது பாராட்டுப்பெற இருக்கும் வயது முதிர்ந்த நாதஸ்வர கலைஞர்களாகிய

★ சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் ★

பெரியார்கள் மாவிட்டபுரம் எஸ். கே இராசா அவர்களும் யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை அவர்களும் ஈழநாட்டிலே நாதஸ்வர பிதாமகர்கள் என்று துணிந்து கூறலாம் இருவரும் நாதஸ்வர குருமார்களாகவும் இருந்து பல இளைய தலைமுறைகளை உருவாக்கி இருக்கிறார்கள்.

இருபது வருடத்திற்கு முன் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் உற்சவத்தில் அன்றைய இளம் வித்வானாக திகழ்ந்த எஸ. கே. இராசா அவர்களின் தோடிராக ஆலாபனை எத்தனையோ அபூர்வபிரயோகங்களுடன் மைல் தூரத்திற்கு அப்பால் நிற்பவர்களைக் கூட மெய்சிலிர்க்க வைக்கும் தோடிக்கு ஒரு இராசா எனப் புகழப்பட்டவர் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த நாதஸ்வர தவில் வித்வான்கள் மூக்கில் விரல் வைக்கக் கூடிய அளவிற்கு அவரின் இசைத்திறமை இருந்தது. இதே அளவு பெருமை மிக்கவர் தான் யாழ்ப்பாணம் பி. எஸ. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் இவர் இளமையில் கையாண்ட பல அபூர்வபிரயோகங்கள் கூட வாசிப்பவர்களை திணற அடிப்பது வழக்கம் இவர் ஈழநாட்டில் மட்டுமல்லாது கடல்கடந்தும் பல தேசங்களுக்கு சென்று நாதஸ்வர இசையின் பெருமையை நிலைநாட்டியவர். இருவருமே நாதஸ்வர இசையின் பெருமையை உணர்ந்து கையாண்டார்கள். பி எஸ ஆறுமுகம் அவர்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் நடந்த நாதஸ்வர தவில்பாடசாலைக்கு அதிபராக இருந்தார். பெருமை மிக்க இரு நாதஸ்வர மேதைகளும் பாராட்டுப் பெற இருக்கின்றார்கள். இவர்கள் இன்னும் பலகாலம் வாழ்ந்திருந்து நாதஸ்வர மேதைகளாக விளங்கும் இளம் சந்ததியினருடைய சந்தேகங்களைப் போக்கிவர இறைவன் துணை நிற்பாராக கலைத்தாய்க்கு கிடைக்கும் பெரிய பாராட்டாக இவ்விழாவைக் கொள்வோமாக.

இவ்விசேட அநுபந்தத்தை

03014

கலைஞர்களை வாழ்த்தி இளம்கலைஞர் மன்றம் தயாரித்து அளிக்கிறது

நல்லூர் இளை நூலகம்
மாதகர் ... றம்
யாழ்ப்பாணம்



# அசர்பைஜான்-ஆர்மேனிய மோதலை நிறுத்த அமைதிப்படையை அனுப்பகஜசிஸ்தான் அதிபர்கோரிக்கை

ரஷ்ய காமன்வெல்த் நாடுகளான அசர்பைஜானுக்கும் ஆர்மேனியாவுக்கும் இடையிலான மோதலைத் தடுப்பதற்கு ஐ.நா. வின் அல்லது வெளிநாடொன்றின் அமைதிப்படையை அங்கு அனுப்புமாறு மற்றொரு ரஷ்ய காமன்வெல்த் நாடான கஜசிஸதானின் அதிபர் கோரியுள்ளார்.

அத்துடன் ரஷ்ய காமன்வெலத் நாடுகளுக்கிடையே இவ்வாறான மோதல்கள் எழுவதைத் தடுப்பதற்கு முன்னாள் சோவியத் குடியரசுகளின் தனியான இராணுவத்தை முடக்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்,

இதேவேளை அசர்பைஜான்-ஆர்மேனியா சண்டையை நிறுத்த இரு நாடுகளும் அமைதிப் பேச்சு நடத்த முன்வர வேண்டுமென ரஷ்ய அதியர் ஜெல்ட்ஸின் கேட்டுள்ளார்.

## ஆட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவது கட்டாயமாகிறது!

கொழும்பு மாநகர எல்லைக்குள் சேவையாற்றும் 'ஆட்டோ'முச்சக்கர வாடகை வண்டிகள் மீற்றர்களைப் பொருத்திக் கொள்ளுதல் கட்டாயமாக்கப்படவுள்ளது.

அத்துடன் கொழும்பு மாநகர எல்லைக்குள் ஒரு மைலுக்கு 15 ரூபாவையும் அதற்கடுத்த ஒவ்வொரு மைலுக்கும் 10 ரூபாவையும் மட்டுமே ஆட்டோக்கள் வாடகைக் கட்டணமாக அறவிட வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழப் பெண்கள்மாநாடு சனி,ஞாயிறில் இடம்பெறும்

தமிழீழப் பெண்கள் மாநாடு கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளது

மாநாட்டின் நோக்கங்கள், குறிக்கோள்கள் குறித்து செல்வி ஜெயா தனது தலைமையுரையில் கூறுவார்

ஞாயிறன்று நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவின் உரையும் இடம் பெறும்.

## காவிரிநீர்; 21ஆம் திகதி சுப்ரீம்கோர்ட் விசாரணை ஆரம்பம்

சர்ச்சைக்குரிய காவிரி நீர் பங்கீடு விடயம் தொடர்பாக நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு கோரி கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணைஎதிாவரும் 21ஆம் திகதி டில்லி சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுளளது

இருபதினாயிரத்து ஐந்நூறு கோடி கன அடி காவிரிநீரை கர்நாடக அரசு, தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டுமென நடுவர் மன்றம் தனது இடைக்காலத்தீர்ப்பில் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

## போட்டிப் பரீட்சையில் அதிகளவில் பௌத்தம் பற்றிய வினாக்கள்

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை வினாத்தாளில் சிங்கள பௌத்தம் சம்பந்தப்பட்ட கேள்விகளே கூடுதலாக இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'இலங்கையில் மிகப்பெரிய புத்தர்சிலை எங்குள்ளது 'அண்மையில் எங்கு புதிதாக விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டது?' போன்றவை இந்த வினாக்களுள் சிலவாகும்.

## கசிப்பு உற்பத்தியாளர்கள் காவற்துறையால் கைது!

கசிப்பை உற்பத்தி செய்து விற்பனை செய்த தகப்பனும், மகனும் சாவகச்சேரி காவற்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டதுடன் இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## நீர்வீழ்ச்சியில்குதித்து சாதனை; ஆனால் தோலில் சறுக்கி ...

நீர் வீழ்ச்சியில் குதித்து சாதனை புரிந்த ஒருவர் வாழைப்பழத்தோலில் சறுக்கி விழுந்து மரணமானார்.

இச் சம்பவம் நியூசிலாந்தில் நிகழ்ந்துள்ளது. பாலி லீச்என்பவர் 1911 ஆம் வருடம் ஒரு பீப்பாவில் அமர்ந்து நயாகரா நீர் வீழ்ச்சியில் உருண்டு சாதனை படைத்தார் எந்த ஆபத்துமின்றி இச் சாதனையைப் புரிந்த அவர் பின்னர் நியூசிலாந்து நாட்டில் ஒரு வாழை பழத்தோலின் மீது வழுக்கி வழுந்து இறந்து விட்டார்.

## ஏனோ இந்தத்தாமதம் 1 மைல் கடக்க 30 நாள்கள்

திருநெல்வேலியில் உள்ள நல்லூர் பிரதேச சபையினால் கல்வியங்காடு வர்த்தகர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் ஒரு மாத காலத்துக்குப் பிறகு வந்து சேர்ந்துள்ளன.

ஒரு மைல் தூரத்துக்கும் குறைவான இந்த இடைப்பட்ட தூரத்தைக் கடப்பதற்கு இந்தத் தபால்களுக்கு ஏன் இவ்வள்வு நீண்ட நாள்கள் எடுத்தன என்பது பெரும் ஆச்சரியமாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (41)

## 'ஆசிரியர்களுக்கு எதிராக அமெரிக்கா செயற்படுகிறது'

அமெரிக்கா ஆசிரியர்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டிவிடும் வகையில் நடப்பதாகசிவில் உரிமைகளுக்கான அமெரிக்க கமிஷன் குற்றம் சாட்டியுள்ளது.

வாஷிங்டனில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் இக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுளளது.

ஆசிரியர்களுக்கு பல அமெரிக்க அரசு நிறுவனங்களால் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடற்கரை மணலுக்குள் கள்ளச்சாராயப் பக்கட்டுக்கள்

தமிழ்நாட்டில் திருவொற்றியூர்க் கிராமத்தில் கடற்கரை மணலில் இருந்து பெருமளவு சாராயப் பக்கட்டுக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன,

சுமார் பதினெட்டாயிரத்துக்கும் அதிகமான சாராயப் பக்கட்டுக்கள் அங்கு தோண்டியெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீவிர மதுவிலக்கு அமுலில் உள்ள தமிழகத்திற்கு இவை ஆந்திராவிலிருந்து கடத்திவரப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியா ரயில் பயணிகளுக்கு வசதிகள் கிட்டும்!

வவுனியா ரயில் நிலையத்தில் மே மாதத்திற்கிடையில் பயணிகளுக்கு மேலும் சில வசதிகள் செய்து கொடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் நிலையத்தில் சிற்றுண்டிச் சாலை, புகையிரத பாதுகாவலர் தங்கும் மண்டபம், குடிநீர் பெறுவதற்கான குழாய்க் கிணறு என்பன புதிதாக அமைக்கப்படவுள்ளன.

★ நேரடி அனுபவம் பற்றி இந்திய பத்திரிகையாளர்

# விடுதலைப்புலிகளின் நிருவாகத்தில் வடக்கு மக்கள் நிம்மதியாகவாழ்கிறார்கள்!

இந்திய அமைதிப்படை வடக்குக் கிழக்கிலிருந்து விலகியபின் வவுனியா- தாண்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து 2 கிலோமீற்றர் தூரம் சென்றதும் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தைக் காணலாம் அந்த நிர்வாகத்தில் மக்கள் மிகவும் நிம்மதியாகவும் அமைதியாகவும் திரிகிறார்கள்,

இவ்வாறு 'இந்தியன் எக்ஸபிரஸ்' தினசரியில் யாழ்ப்பாணத்திற்கு நேரடி விஜயம் மேற்கொண்டு திரும்பிய அனிதா பிரதாப் எழுதியுள்ளார்.

"வடமாகாணம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளது கூடுதலாக சைக்கிள்களையும் மோட்டார் சைக்கிள்களையுமே காணமுடிகிறது யாழ்ப்பாணத்தில் புலிகள் பொலிஸ படை ஒன்றையும் உருவாக்கியுள்ளனர்

பெண் போராளிகள் பெண் விடுதலைக்காகவும் போராடி வருகிறார்கள்.

போக்குவரத்துக் கடமைப் புகைப்படம் ஒன்றையும் இப் பத்திரிகை வெளியிட்டுள்ளது, (22)

## 30 யாழ், பாடசாலைகளில் கல்விமுகாமைத்துவ பயிற்சிகள்

யாழ். கல்வித் திணைக்கள மாவட்ட முகாமைத்துவ நிலையம் இவ் ஆண்டுக்கான கல்வி முகாமைத்துவ விருத்தி பயிற்சிகளை எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 30க்கு யாழ். இந்துக்கல்லூரியில் ஆரம்பித்துவைக்கவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு கோட்டத்திலும் ஐந்து பாடசாலைகள் வீதம் மொத்தம் 30 பாடசாலைகளில் கல்வி முகாமைத்துவப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

## இடம்பெயர் சேவையால் பாடசாலைகளுக்கு அதிர்ஷ்டம்

ஒன்பதாவது ஜனாதிபதி இடம்பெயர் சேவைகள் மே மாத இறுதியில் வவுனியாவில் ஐந்து பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், காமினி மகாவித்தியாலயம், சைவப பிரகாச வித்தியாலயம், சி. சி தமிழ்க் கலவன் பாடசாலை, இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் என்பனவற்றிலேயே ஜனாதிபதி இடம் பெயர் சேவைகள் இடம்பெறவுள்ளன.

இதனால் மேற்குறிப்பிட்ட பாடசாலை மண்டபங்கள், கட்டிடங்கள் என்பன திருத்தியமைக்கப்படவுள்ளன இதற்காக ஒருகோடி 10இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## மட்டு. வாவியில் மீன்பிடிக்க அனுமதி

மட்டக்களப்பு வாவியில் இரவில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கல்லடிப்பாலம் முதல் புதுப்பாலம் வரையிலான மட்டு வாவியில் மாலை 6 மணிமுதல் காலை 6மணி வரை மீனவர் தங்கியிருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிரித்திரன் சிந்தனைச் சிரிப்பு

★ எமது மாணவர் பற்றி உமது கருத்து?
பொம்பர் அடியிலும், ஷெல் அடியிலும், நுளம்புக்கடியின் மத்தியிலும் நிறையப் புள்ளிகள் எடுக்கும் பெரும்புள்ளிகள்.

★ கொடுமை எது? கொடுமையிலும் கொடுமை எது?
பிறந்த மண்ணிலேயே அகதியாக்கப்படுவது கொடுமை. அகதி முகாம்கள் மீது குண்டு போடுவது கொடுமையிலுங் கொடுமை.

★ தமிழன் நிலை பற்றி?
அகிலமெல்லாம் அகதி; அதுதான் ஜனநாயக ஆட்சியின் மாட்சி,

★ யுத்தகாலச் சிந்தனை ஒன்று கூறும்?
வேட்டு கொல்லாமல் விடலாம். வதந்தி கொல்லும்.

நன்றி: 'மகுடி பதில்கள்'
சிரித்திரன்
தை. மாசி 1992

☐ இந்த இதழில் சிரிகதை. புத்துயிர் பெறும் மொழியுணர்வு, சுவை மீட்டல், குறுமணி, அறுகுடன் ஐந்து மணித்துளிகள், உருவகம் உள்ளிட்ட பல நகைச்சுவை கேலிச் சித்திரங்கள், துணுக்குகள், சிந்தனைக் கதைகள் என்பன வழமைபோல் வெளியாகியுள்ளன.

# வெளிநாடுகளில் முடக்கப்பட்ட ஈராக் சொத்துக்களை முற்றாகச் சுவிகரிக்க ஐ. நா. சபை ஆலோசனை

ஈராக்கினால் வெளிநாட்டு வங்கிகளில் வைப்பிலிடப்பட்டு,தற்பொழுது ஐ நா.வினால் முடக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை முற்றாகச் சுவிகரிப்பது பற்றி ஐ நா. பந்தோபஸ்து சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் தற்பொழுது தீவிரமாக ஆலோசனை செய்து வருவதாகத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

அமெரிக்காவில் 50பில்,டொலர்கள் உட்பட மொத்தம் 500பில். டொலர் சொத்துக்கள் வெளிநாடுகளில் ஈராக்கிற்கு உண்டு.

இந்தச் சொத்துக்களை முற்றாகச் சுவீகரித்து அவற்றை ஐ நா. வின் பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்ட ஈராக் மக்களுக்கும், குவைத் மீதான ஈராக்படையெடுப்பினால் பாதிக்கப்பட்டோர், அணு ஆயுத உற்பத்தி நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர் ஆகியோரின் நலனுக்குப் பயன்படுத்துவது குறித்தும் ஐ நா. உறுப்பு நாடுகள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.

## ‘பிரிவில் இன்பம் காண்பவர்கள் அரசியல்வாதிகள் அடிபட்டுச் சாகின்றவர்கள் அப்பாவி மக்களே’

தமிழர் - சிங்களவரைப் பிரித்துவைத்து இன்பம் காண சில அரசியல் வாதிகள் பெருமுயற்சியெடுக்கிறார்களென பிராத்மனவத்த சீலவி தேரோ என்ற பௌத்தபிக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு பொது நூலக கேட்போர் மண்டபத்தில் சிங்களவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் இலக்கிய விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இந்த தேரோ இப்படித் தெரிவித்தார்.

இப்படி சிங்களவரையும் - தமிழரையும் பிரித்துவைப்பதில் அரசியல்வாதிகள் இன்பம் காண்கிறார்கள் ஆனால் சாதாரண பொது மக்களே இதனால் அடி உதை பட்டுச் சாகிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாழை தோரணம் கட்டி, பூரண கும்பம் வைத்து, கோலமிட்டு, நாதஸ்வர இசையுடன் இந்த விழா ஆரம்பமானது பேராசிரியர் ஆரியரட்ணா சிங்களத்தில் எழுதிய ‘தமிழ் இலக்கிய மகாநாடு’, ‘தமிழ் சிற்றிலக்கிய அகராதி’ ஆகிய நூல்களும் விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

விழாவுக்கு வந்திருந்த சிங்கள இனத்தவர் பலரும் சந்தன, குங்குமப் பொட்டிட்டு. வேட்டியுடன் காணப்பட்டனர்

## இலவச உணவு, படிகளுடன் 3 மாத பனந்தொழிற் பயிற்சி

பனந் தொழிற் பயிற்சிக்கு தெங்கு பனம் பொருள் ஒன்றியத்தினால் புதிய பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

ஏற்கனவே மூன்று மாதப் பயிற்சியில் உள்ளவர்கள் இம் மாதத்துடன் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறவிருப்பதனால் அடுத்த மாதம் முதல் புதிய பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

மூன்று மாதப் பயிற்சியின் போது தங்குமிட வசதி, உணவு போன்றவற்றுடன் மாதப் படியாக 1000 ரூபாவும் வழங்கப்படுகின்றது (09)

## வட்டு. அணி வெற்றிபெற்றது

தோப்புக்காட்டைச் சேர்ந்த வீரவேங்கைகள் உதயன், மணிமாறன் ஆகியோர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக, தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 7 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து மோதிய சிங்கவீரர் விளையாட்டுக் கழக அணியைத் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி இப் போட்டியில் கலந்துகொண்டார். (16)

## இலங்கையில் ‘புதிய யுத்தம்’; ‘நியூஸ்வீக்’ விமர்சனம்

இலங்கையில் புதிய யுத்தம் ஒன்று நடைபெற்று வருவதாக சிலாபத்தில் ‘வொய்ஸ் ஒவ் அமெரிக்கா’ ஒலிபரப்பு நிலையம் அமைவதற்கு எதிரான நடவடிக்கைகளை ‘நியூஸ்வீக்’சஞ்சிகை வர்ணித்துள்ளது.

இச் சஞ்சிகையில் சிலாபம், நீர்கொழும்புப் பகுதியிறிருந்தவர்கள் இங்கு உல்லாசப் பிரயாண ஹோட்டல் கட்ட விடாமல் தடுத்தமை பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

இங்குள்ள ஆயர் தலைமையில் உல்லாசப் பயணிகளை இவர்கள் பகிஷ்கரித்து வருவதாகவும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

எய்ட்ஸ், போதைவஸ்து பாவனை போன்றவற்றைத் தடுப்பதற்காகவே இந் நடவடிக்கை என குறிப்பிட்டுள்ள அச் சஞ்சிகை பெண்களுக்கு தாய்லாந்து, சிறுவர்களுக்கு இலங்கை என ஜேர்மன் பத்திராதிபர் ஒருவர் கூறியதையும் சுட்டிக்காட்டியுள்ளது (22)

## தேவையற்றவிடுமுறைதினங்களில் பாடசாலைகளை நடத்த ஆலோசனை

ஸ்ரீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள தேவையற்ற விடுமுறை நாள்களில் தமிழ்ப் பகுதிப் பாடசாலைகளை நடத்துவது குறித்துத் ‘தமிழ்முக் கல்வி மேம்பாட்டுப் பேரவை’ ஆலோசித்து வருவதாகத் தகவலொன்று வெளியாகியுள்ளது.

இப் பேரவையில் கல்வியில் ஆர்வம் கொண்ட திணைக்கள அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர், இன்னும் சில கல்விமான்கள் அங்கம் வகிக்கிறார்கள். இப் பேரவையின் கூட்டம் அண்மையில் ‘பாலம்’ பணிமனையில் நடைபெற்றது

‘எமது மாணவர்கள் கற்று முடிக்க வேண்டிய பாடத்திட்டத்தை முடிக்கவேண்டுமென்ற ஒரேயொரு காரணத்துக்காகவே தேவையற்ற விடுமுறை நாள்களில் பாடசாலைகளை நடத்தவேண்டுமென்ற ஒருமித்த கருத்து இவ் ஒன்று கூடலில் தெரிவிக்கப்பட்டதாக இக் கூட்டத்தை ஒழுங்கு படுத்திய ‘பாலம்’ பொதுப்பணி மன்றத்தின் தலைவர் ஆ. சின்னராயர் அமதி அடிகளார் தெரிவித்தார்.

இந்த முடிவில் எவ்வித அரசியல் இலாபமும் இல்லையெனவும். விடுதலைப்புலிகளால் இந்தப் பாடசாலை நாள்கள் திணிக்கப்பட்டன என்பது முற்றிலும் தவறானது எனவும் அவர் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## முல்லை மாவட்டத்தில் 50 பேர் நியமனம் பெறுவர்

அண்மையில் நடைபெற்ற எழுதுவினைஞர் தெரிவு போட்டிப் பரீட்சைக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 250 பேர் தோற்றியுள்ளனர்.

இவர்களில் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு எழுதுவினைஞர்களாக நியமனம் செய்யப்படுவர். (22)

## கலாசாலைப் போட்டிகள்

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களின் விளையாட்டுப் போட்டி இம் மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (22)

## போட்டி பற்றிய கலந்துரையாடல்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றும் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் 07 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகத்தில் நடைபெற உள்ளது

பங்குபற்றும் கழகங்களில் இருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளை இக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

## சான்றிதழ் வழங்கலில் தாமதம்; தவிர்க்க அரசஅதிபர் நடவடிக்கை

பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதம் காரணமாக அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் பிரதேசச் செயலாளர் அலுவலகங்களில் தேங்கிக் கிடப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

பிறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான படிவங்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமை, காலத்துக்குக் காலம் தேவைக்குக் குறைவான படிவங்கள் கிடைக்கப் பெறல், அதிக அளவில் பிறப்புச் சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் தேங்கியிருத்தல் போன்ற காரணங்களால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பஞ் செய்பவர்கள் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியாமையைத் தவிர்பதற்காக, தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களின் பிறப்புச் சம்பந்தப்பட்ட விவரங்களை கிராம சேவை உத்தியோகத்தர்கள், பிரதேசச் செயலாளர்களினூடாக விண்ணப்பதாரி அனுப்பி வைத்தால் மேலதிக மாவட்டப் பதிவாளர் அவற்றைப் பரிசீலனை செய்து உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது (25)

★ விமானக் குண்டுவெடிப்பு விவகாரம்

## லிபியாவின் நிபந்தனையை ஏற்க அமெரிக்கா முற்றாக மறுப்பு!

1988இல் ‘பான்அம்’ என்ற அமெரிக்க பயணிகள் விமானத்தையும், 1989 இல் ‘யு.ரி ஏ’ என்ற பிரான்ஸ் பயணிகள் விமானத்தையும் குண்டுவைத்து ஆகாயத்தில் தகர்த்ததன் மூலம் பலரின் மரணத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களையும் ஒப்படைக்க லிபியா விதித்துள்ள புதிய நிபந்தனையை ஏற்க முடியாது என அமெரிக்கா அறிவித்துள்ளது,

இது ஒரு புதிதான விடயமல்ல என அமெரிக்கா இது குறித்துத் தெரிவித்துள்ளது.

இந்த இருவரையும் ஒப்படைப்பதாக இருந்தால் அமெரிக்காவுக்கும் லிபியாவுக்குமிடையேயான உறவுகளை விருத்திசெய்ய அமெரிக்கா இணங்கவேண்டுமென லிபிய அதிபர் கேர்ணல் கடாபி நிபந்தனை விதித்திருந்தமை தெரிந்ததே.

## பொன்னாலை ஷெல் தாக்கு

காரைநகர் இராணுவ முகாமில் இருந்துஇராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பொன்னாலை பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மெற்கொண்டனர். 4/

## கொழும்பு இந்துதேசியகல்லூரியில் 3300 மாணவர்; 106 ஆசிரியர்!

கொழும்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமைபிற்பகல் இடம்பெற்றது

கடந்த வருடம் தேசிய பாடசாலையாக பிரகடனப்படுத்தப்பட்ட கொழும்பு இந்துக்கல்லூரியில் தற்பொழுது 3300 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 106 ஆசிரியர்கள் கல்வி போதிக்கின்றனர்.

## அரிதான மூலப் பொருள்களை மனித உடலில் பெறலாம்!

பலகால ஆராய்ச்சியின் பின் கலாநிதி கே.வை.என். மொறிஸ் என்பவர் ஒரு சாதாரண மனிதனின் உடலில் உள்ள மூலங்களில் இருந்து பின்வருவனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

ஒரு கரண்டி உப்பு, பத்துகலன் நீர், ஒரு வாளி சுண்ணாம்பு, ஒரு பெட்டி கிலைகள் செய்யக் கூடிய கந்தகம், இரண்டு அங்குலஆணி ஒன்றைச் செய்யக்கூடிய இரும்பு, 9 ஆயிரம் பென்சில்கள் செய்யக் கூடிய கரி, 2 ஆயிரத்து இருநூறு தீக்குச்சிகள் செய்யக் கூடிய பொஸ்பரசு, 7 சாதாரண சவர்க்காரக் கட்டிகள் செய்யப் போதுமான கொழுப்பு என்பனவாகும். (16)

நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

● பரீட்சார்த்த முயற்சியாக

# காங்கேசன்துறை களஞ்சியத்திற்கு 4லொறிகள் நாளைபுறப்படுகின்றன

காங்கேசன் துறைமுகத்திற்கான போக்குவரத்து நாளை சனிக்கிழமை ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

பரீட்சார்த்தமாக அன்று காலை8 மணிக்கு 4 லொறிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு செல்லவுள்ளன.

அங்கு களஞ்சியத்திலுள்ள உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டு இந்த லொறிகள் பிற்பகல் யாழ்ப்பாணம் திரும்பும் என செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன

இந்த பரீட்சார்த்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ந்து காங்கேசன்துறைக்கு லொறிகள் சென்றுவரும் என செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன

காங்கேசன் துறைக்கான இப்பாதையில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும்பணிகள் பூர்த்தியானதையடுத்தே நாளை லொறிகள் அங்குசெல்லவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது 07, 47

UNIVERSITY OF JAFFNA

THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

Graduates /Postgraduates are requested to apply for the above fellowship giving their bio-data and research proposal in plant tissue culture and genetic engineering The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs 2, 500/= shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship The fellowship may be terminated at any time if the prokent is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory

The Closing date for applications will be 30 04 1992

Registrar
University of Jaffna
03016

## நாதஸ்வர மேதைகளுக்கு பாராட்டு விழா

இரு முதுபெரும் நாதஸ்வர கலைஞர்களான எஸ் கே. இரசா, பி எஸ. ஆறுமுகம் பிள்ளை ஆகியோருக்கு இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயக்கல்யாணமண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் இப்பாராட்டுவிழா நடைபெறவுள்ளது.

விழாவுக்கு சங்கீத பூஷணம் பொன்சுந்தரலிங்கம் தலைமை தாங்குகிறார். புதுவை இரத்தினதுரை, நா. சச்சிதானந்தன், நா க பத்மநாதன், இ. ஜெயராஜ் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சண்முகநாதக் குருக்கள் நா. வீரமணிஐயர் மூதலானோர் ஆசியுரை வழங்குவர்.

வட மாநிலக் கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர்

UNIVERSITY OF JAFFNA

M.Sc.Biotechnology

"Graduates in Chemical, Biological, Medical, Dental. Veterinary, Agricultural and Engineering Sciences will be considered Forward application with bio-data All applicants will be required to sit for a qualifying examination and a viva Address correspondence to Registrar, University of Jaffna, Jaffna"

Closing date 16th of March 1992.

Registrar.
University of Jaffna
03015

## தமிழ் அகதிகள் திரும்பும் காலம்

இந்தியாவிலிருந்து தமிழ் அகதிகள் இலங்கை திரும்பும் காலம் வந்துவிட்டதாக கூறுகிறார் இந்தியாவிற்கான ஸ்ரீலங்கா தூதுவர் நெவில் கனகரத்ன.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தாம் திரும்பும் அகதிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு போதிய நிவாரணம் வழங்குவதாகவும் இதனால் தமிழ் அகதிகள் தாமாகவே திரும்பிச் செல்லும் காலம் வந்துவிட்டதாகவும் கூறினார்.

## மோசமான நிலையில் வீதி

காங்கேசன் துறையிலிருந்து சேந்தான்குளம் கீரிமலை இளவாலை வீதி விளான் சந்திவரை படுமோசமான நிலையில் உள்ளது. 06

# கடலில் கைது செய்யப்பட்டோர்

மீன்பிடிக்கச் சென்றபோது கடலில் வைத்து கைதாகி பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 121 பேர்களின் பெயர் விவரம் வருமாறு

| | |
|---|---|
| தவராஜா சிவகுமார் / சதா | வல்வெட்டித்துறை |
| கனகசபை இராஜேந்திரன் / குட்டிராசா | தொண்டமனாறு |
| அருளானந்தன் அற்புதராஜ் / ஆனந்தன் | பருத்தித்துறை |
| செல்லையா துரைரட்டினம் / துரை | நாகர்கோவில் கிழக்கு |
| தங்கராஜா சண்முகராஜா / குட்டி | வ. வெ- துறை |
| வேலுகம் சந்திரலிங்கம் / சந்திரன் | தாழையடி |
| வடிவேலு சின்னத்துரை / சுதா | வெற்றிலைக்கேணி |
| யாகப்பர் அன்ரன் சாள்ஸ் / சந்திரன் | பருத்தித்துறை |
| சித்திரவேல் அமிர்தலிங்கம் / அமுதன் | வாழைச்சேனை |
| வினாசித்தம்பி குலசிங்கம் / காந்தன் | பருத்தித்துறை |
| கதிரிநாதன் செல்வம் / மணிவண்ணன் | குருநகர் |
| கந்தசாமி பத்மநாதன் | வல்வெட்டித்துறை |
| சூசைப்பிள்ளை ஜேசுதாசன் | பருத்தித்துறை |
| இராசையா சிதரன் / திலீபன் | அல்வாய் |
| வல்லிமயில் குணபாலசிங்கம் / குமார் | நாகர்கோவில் வடக்கு |
| அந்தோனிப்பிள்ளை மனோகரன் | இளவாலை |
| பாக்கியநாதன் ஞானசீலன் | பொலிகண்டி |
| தெட்சணாமூர்த்தி திருஞானமூர்த்தி | தாழையடி |
| குழந்தைவேல் ஆறுமுகம் | சக்கோட்டை |
| அலெக்ஸ் றூபசட் விக்சன் | செம்பியன்பற்று |
| செல்லத்த பி சேகர் | விடத்தல்தீவு |
| சுப்பிரமணியம் சற்குணராஜா | மன்னார் |
| திருவேங்கடாசலம் அம்பலவாணம் | மாதகல் |
| நடராசா உத்தமசீலன் | தொண்டமனாறு |
| கணபதிப்பிள்ளை ரவீந்திரன் | பொலிகண்டி |
| சீனிப்பிள்ளை சந்திரலிங்கம் | தாழையடி |
| இராசதுரை ஜெயராஜா | தாழையடி |
| சங்கரப்பிள்ளை இந்திரலிங்கம் | பருத்தித்துறை |
| குழந்தைவேல் குணசேகரம் | வல்வெட்டித்துறை |
| ஜேசுதாசன் அருள்தாஸ் | அல்வாய் |
| முருகேசு கமாரராஜு | பருத்தித்துறை |
| இராஜரட்டினம் ஜீலியற் பிராங்கிளின் | பருத்தித்துறை |
| பிலிப்பையா டேவிட் ஜீவதாஸ் | அல்வாய் கிழக்கு |
| கஸ்பர் அந்தோனிப்பிள்ளை | கரவெட்டி |
| கனாப்பிள்ளை சுப்பிரமணியம் | வெற்றிலைக்கேணி |
| நாகலிங்கம் சந்திரசேகரம் | முல்லைத்தீவு |
| யாக்கோப் ஜீவா | தலைமன்னார் |
| இன்னாசி சூசை | குருநகர் |
| அந்தோனிப்பிள்ளை பாக்கியராஜா | கொழும்புத்துறை |
| கந்தசாமி ராஜு | மல்லாகம் |
| கணபதிப்பிள்ளை நவரத்தினம் | தாழையடி |
| வேலுசாமி ரவீந்திரன் | தாழையடி |
| ஞானப்பிரகாசம் லோகிலா ஜெயசீலம் | மாதகல் |
| குமாரசாமி ஞானசேகரம் | தாழையடி |
| நாகரத்ணம் ஜெயராஜா | இராசாவின்தோட்டம் |
| ஜஸ்மின் ஜோசேற் ராஜ்குமார் சலேசியர் | நாவலர் றோட், யாழ்ப்பாணம் |
| பாக்கியநாதன் அன்ரன் மணியந்தோட்டம், | கொழும்புத்துறை |
| இரத்தினம் சுப்பிரமணியம் | தொண்டமனாறு |
| மகாலிங்கம் பொன்னுத்துரை | பருத்தித்துறை |
| செல்வகதிரமலை செல்வமனோகரன் | பொலிகண்டி |
| வேலும்மயிலும் மதிவண்ணா | வல்வெட்டித்துறை |
| பிலோமிநாதர் விக்ரர் அருந்தவராசா | பருவலை, பொலிகண்டி |
| காந்தலிங்கம் அருணைத்துரை | பொலிகண்டி |
| நடராசா இராஜேஸ்வரன் | கெருடாவில் |
| பொன்னம்பலம் கந்தசாமி | பொலிகண்டி |
| முத்துசாமி சோமசுந்தரம் | தலைமன்னார் |

தொடரும்

நாதஸ்வர—

அவர்களின் சங்கீத உபந்நியாசங்களுக்கும், இசைப்புலவர் ந. சண்முகரத்தினம் அவர்களின் இசைக் கச்சேரிகளுக்கும் கடம் வாசித்த ஆறுமுகம் பிள்ளையவர்கள் இசைப் புலவர் சண்முகரத்தினத்தின் இசையின்பத்தில் மூழ்கி அவரின் பாணியில் நாதஸ்வரம் வாசிக்க வேண்டுமென்ற ஆவலினால் நாதஸ்வர இசைக்கு ஒரு தனிப் பரிமாணத்தைத் தேடித்தந்துள்ளார்.

வேதாரண்ணியம் வேதமூர்த்தி அவர்களுக்குப் பின் அவரது பாணியில் வாசித்து வந்த ஒரேயொரு நாதஸ்வர மேதை ஆறுமுகம்பிள்ளை அவர்களே.

திருவையாறு தியாகராஜ உற்சவத்தில் அவர் வாசித்து ஈழத்தின் பெருமையை வரலாற்றில் பொறித்தவர்.

1975 ஆம் ஆண்டென நினைக்கிறேன். கொழும்பு வேல் விழாவுக்கு இராமநாதபுரம் சுப்பிரமணியம் என்றொரு நாதஸ்வர வித்துவான் வந்திருந்தார். வேல்விழாவின் பின் கொழும்பு செக்கடித் தெருவில் ஓர் திருவிழாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பி எம் ஆறுமுகம் பிள்ளை அவர்களும், அளவெட்டி எம். பி, பாலகிருஷ்ணன் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இராமநாதபுரம் சுப்பிரமணியம் அவர்கள் சிறப்பு நாதஸ்வர இசை வழங்க வந்திருந்தார்கள்,

"சிலோனிலே திறமையான நாதஸ்வரக் கலைஞர் யார் இருக்கப் போகிறார்கள?" என்ற பாவனையில் அவர் என்னுடன் உரையாடி விட்டு வாசிக்கத் தொடங்கினார், அவர் வாசித்த இராகத்தையும், பல்லவியையும் வைத்தே தனது மதியூகத்தினால் சுப்பிரமணியம் அவர்களைத் திணறடித்து விட்டார் ஆறுமுகம்பிள்ளையவர்கள், போதாததற்கு எம் பி. பாலகிருஷ்ணன் அவர்களும் சேர்ந்தால் சொல்லவும் வேண்டுமா?

"சார்! உங்க ஆளுக எமகாதகர்கள் சார்!" என்று அசடு வழிய அவர் கூறியது இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

## வண்ணை இசைக் கலைஞன் ஆறுமுகம்பிள்ளை வாழியவே!

வண்ணைநகர் வைத்தீஸ்வரன் வளமார்ந்த சேவடிகள்
வண்ணைநகர் ஆறுமுகம் பிள்ளையெனும் இசைக் கலைஞன்
வண்ணமுற நாதஸ்வர இசைபொழிந்து பக்தியொரு
வண்ணைநகர் வைத்தீசனை நண்ணித்துதி செய்தனனே
வண்ணைநகர் வைத்தீசன் வாரியென இசைஞானம்
வண்ணைநகர் ஆறுமுகம் பிள்ளைக்கருள் சொரிந்தனனே!
வண்ணைநகர் வைத்தீசன் தண்ணருளால் நீடுழி
வண்ணைஇசைக் கலைஞன் ஆறு முகம்பிள்ளை வாழியவே!

"கவிமாமணி"

## மாவிட்டபுரக் கலைஞன் பல்லாண்டு வாழியவே

மாவிட்ட புரக்கந்தன் மலரடிகள் ஏழிசையால்
மாவிட்ட புரநாதஸ் வரக்கலைஞன் இராசாவெனும்
மாவிட்ட புரத்தேவன் தானவித்து வான்என்றும்
மாவிட்ட புரத்தானை நாதமலர் சொரிந்தேத்தி
மாவிட்ட புரக்கந்தன் சேவைதனைச் செய்தனனே!
மாவிட்ட புரக்கந்தன் மாபெரும் இசைஞானம்
மாவிட்ட புரராசா மனமகிழ அருளினனே!
மாவிட்ட புரக்கலைஞன் பல்லாண்டு வாழியவே!

# தமிழ்ப் பகுதிகளில் சிங்களவரை குடியேற்ற வீடமைப்புத் திட்டம்

திருகோணமலையிலுள்ள மனையாவெளி, சாண்டிக் குடா ஆகிய பகுதிகளில் மாதிரிக் கிராம வீடமைப்புத் திட்டங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சுச் செயலாளர் தெரிவித்துள்ளார், இவ் வீடமைப்புத்திட்டத்தில் தமிழ், சிங்கள பறங்கிய சமூகத்தைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதி இலங்கைக் கடற்படைத் தளத்திற்கும், பொது மருத்துவ மனைக்கும், கந்தசாமி மலைக்கும் இடைப் பகுதி என்பதும் இங்கு இந்திய நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் இலங்கைத் தமிழர்களும் பரந்து வாழ்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் சிங்களவர்களுக்கு வீடமைத்துக் கொடுப்பதன் மூலம் திருமலை நகரில் தமிழர்களைச் சிறுபான்மையோராக்கும் முயற்சியை அரசு மேற்கொள்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

துருக்கியில் பரிதாபச் சம்பவம்

# நிலக்கரிச்சுரங்கம் வெடித்து 78பேர் பலி; 87பேர் காயம்

துருக்கியின் வடபகுதியில் நிலக்கரிச் சுரங்கம் வெடித்ததில் 78 பேர் பலியானார்கள் 87பேர் காயமுற்றனர் இவர்களில் 12பேர் படுகாயமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நில மட்டத்திலிருந்து 1500 அடிக்குக் கீழே உள்ள இந்தச் சுரங்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 30 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

வெடிவிபத்தில் இறந்தவர்கள் பாரம் தூக்கிகளால் வெளிச்சமற்ற இருண்ட சூழ் நிலையிலும் சுரங்கத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டனர் சுரங்கத்தின் வெடிப்பினால் பாராங் கற்கள் பாதையை மூடிவிட்டன. இதனால் வெளியே வர முடியாது பலர் மூச்சுத்திணறி மரணமானதாக அறிவிக்கப்படுகிறது தீச்சுவாலை வீசிக்கொண்டிருக்கிறதென்றும், தமதுசக தொழிலாளர்கள் உயிர்தப்பி வந்து கொண்டிருக்கிறார்களா எனஏக்கத்துடன் சுரங்க வாசலைப்பார்த்துக் கொண்டு ஏனைய தொழிலாளர்கள் காத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் சட்டமூலம்

# கொமன்வெல்த் நாடுகளிடையே குற்றவாளிகள் நாடுகடத்தல்

பொதுநல அமைப்பு நாடுகளிடையே (கொமன் வெல்த்) குற்றவாளிகளைப் பரிமாறும் திட்டத்தில் இலங்கையையும் சேர்த்துக்கொள்ளும் வகையிலான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர், இப்பரிமாற்றத் திட்டத்தின் கீழ் போதைவஸ்து கடத்தல் தொடர்பான குற்றவாளிகளே நாடு கடத்தப்படுவர் எனக் குறிப்பிட்டார்.

போதைவஸ்து கடத்தல் தொடர்பாக பல வெளிநாட்டவர்கள் இங்கு கைது செய்யப்படுவது அதிகரித்து வருவதையடுத்தே இச்சட்ட மூலம் கொண்டுவரப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ராஜீவ் குறித்து சோனியா புத்தகம் எழுதுகிறார்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைப் பற்றி அவரது மனைவி சோனியா காந்தி புத்தகம் எழுதிவருகிறார்.

எதிர்வரும் மே 21 ஆம் திகதிக்கு முன்னதாக புத்தகம் எழுதிமுடிக்கவேண்டும் என சோனியாதீவிரமாக உழைத்து வருகிறார்.

இதனாலேயே அவர் அண்மைக்காலமாக பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்துவருகிறாராம்

சீன டாங்கிகளின்...

வவுனியாவில் நடைபெறும் இராணுவ நடவடிக்கை சீனாவிலிருந்து ஸ்ரீலங்கா பெற்ற ஆயுதங்களை பரீட்சித்துப் பார்க்கவே என அண்மையில் பி பி ஸி செய்தி குறிப்பிட்டிருந்தமை நினைவிருக்கலாம்


சன்மார்க்கசபை -- குரும்பசிட்டி

## குரும்பசிட்டி மக்களுக்கு இலவச பால்மா விநியோகம்

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த குரும்பசிட்டி (J/242) குரும்பசிட்டி கிழக்கு (J/243) கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த 1 - 3 வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு யாழ். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கிய நிதியில் இலவசமாக பால்மா வகைகள் வழங்கப்படவுள்ளன.

இத் திட்டத்தில் பயன்பெறத் தகுதியானவர்கள் 7-ம், 8-ம் திகதிகளில் பிற்பகல் 2 - 5 மணி வரை மயிலணி ஒழுங்கை, சுன்னாகத்தில் உள்ள சபையின் தற்காலிக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

க. விஸ்வநாதன்
பிரசார செயலாளர்

03018


கோவை மனித உரிமை பாதுகாப்பு மன்றம் புகார்

# அகதிகள் தலைமன்னாருக்கு பலவந்தமாகவே அனுப்பப்பட்டனர்

அண்மைக்காலமாக இராமேஸ்வரத்திலிருந்து இலங்கையின் தலைமன்னாருக்கு அனுப்பப்பட்ட 500 ஈழத் தமிழ் அகதிகளும் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே அனுப்பி வைக்கப்பட்டனர். இவ்வாறு கோயம்பத்தூர் மனித உரிமை பாதுகாப்பு மன்றம் புகார் தெரிவித்துள்ளது.

கோவை, பெரியார் மாவட்டங்களிலுள்ள அகதிமுகாம்களில் உள்ளவர்களை தமது மன்றத்தினர் சந்தித்தபோதே இவ்வுண்மை தெரியவந்ததாக மனித உரிமை பாதுகாப்பு மன்றம் தெரிவித்துள்ளது.

தாயகத்திற்கு திரும்புமாறு வற்புறுத்தி தமிழக அதிகாரிகள் தம்மிடம் கையொப்பங்களை பலாத்காரமாக பெற்றதாக அவ்வகதிகள் தெரிவித்தனராம்.

தமிழ் நாட்டில் உள்ளவர்கள் தம்மை வெறுப்புடனேயே நோக்குவதாக இந்த அகதி முகாம்களுக்கு தலைவரான செல்லையா குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அடையாளம் காணவில்லை

நேற்று முன்தினம் அத்தியடி இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 28 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையினுள் வைக்கப் பட்டுள்ளது.

இச்சடலத்தை உரியவர்கள் எடுக்காத விடத்து மேற்படி வைத்தியசாலை செலவில் அடக்கம் செய்யப்படும் என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது (47 07)

## தபால் பொதிகள் இன்று செல்லும்

யாழ் குடாநாட்டு வெளியூர் தபால் பொதிகள் இன்று (வெள்ளி) காலை எட்டு மணிக்கு யாழ். பிரதம தபாலகத்திலிருந்து கொழும்பு செல்லும் கப்பலில் சேர்ப்பிப்பதற்காக பருத்தித்துறைக்கு கொண்டு செல்லப்படவுள்ளன. 06


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஆடைகள் / துணிகள் சலவை செய்து வழங்குதல்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு, மாதத்தில் இரு தடவைகள் விஜயம் செய்து, ஆடைகள் / துணிகள் சலவை செய்துவிநியோகம்செய்ய சலவைத் தொழிலாளரின் சேவை கோரப்படுகின்றது,

மேற்படி சேவைக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையில் 13·03 92 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் விண்ணப்பங்கள் 13 03 92, பி.ப. 4 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்

03017


கறுப்பினத்தவர்களுடன் அதிகார பகிர்வுக்கு

## தென்னாபிரிக்க அரசு முன் வந்துள்ளது

தென்னாபிரிக்காவில் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் ஆபிரிக்க தேசிய காங்கிரசுடனும் மற்றும் கறுப்பினத்தவர் கட்சிகளுடனும் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க அரசு அறிவித்துள்ளது.

கூட்டுச்சேரும் மூன்று கட்சிகளின் அமைச்சரவை அரசியல் சட்டத்தினாலும், பாராளுமன்றத்தினாலும் அங்கீகரிக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது. ஆனால் இக்கட்சிகளுக்கு எத்தனை இடங்கள் வழங்கப்படும் என இன்னும் தெளிவாக்கப்படவில்லை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ தனது இராணுவ பிரிவைக் கலைத்தாலே அமைச்சரவையில் சேர இடமளிக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு எக்கட்சிக்கு வழங்கப்படும் என்பதில இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது

இதேவேளை ஆபிரிக்க தேசியக் காங்கிரசுக்கு நாட்டு நலனை விற்றுவிட்டதாக தேசியக்கட்சி குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அரசாங்கத்தில் கறுப்பின மக்களும் சேர்ந்து கொள்ள வேண்டுமா என்று கருத்துக் கணிப்பு எடுக்கப்படுமானால பெரும்பான்மையான வெள்ளையர்கள் எதிர்த்தே வாக்களிப்பர் எனகன்சர்வேடிப் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

## புதியமாநிலங்கள்

உத்தரப்பிரதேசங்களில் எட்டு மலை மாவட்டங்களை உள்ளடக்கி 'உத்தரான்சல்' என்னும் பெயரில் புதிய மாநிலம் ஒன்றையும், பீஹாரில் பதினொரு தென்மாவட்டங்களைக்கொண்டு 'வனான்சல்' என்னும் பெயரிலான மற்றொரு மாநிலத்தையும் உருவாக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல் கே அத்வானி யோசனைவெளியிட்டுள்ளார்

நேற்றுச் செய்தியாளர்களிடையே இதனைத் தெரிவித்த அவர், இவ்வாறு செய்வதன் மூலம் உத்தரப்பிரதேசத்திலும், பீஹாரிலும் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வான வளர்ச்சிப போக்கைச் சீரமைக்க முடியும் என்றார்.

வீடியோ...

ஊடாக விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

இடபடக்காட்சி மூலம் உலக நாடுகளில் நடைபெற்ற யுத்தமும் யுத்தத்தின் போது மக்களின் பங்களிப்புகள் பற்றியும் எடுத்துக் காட்டப்பட்டது. 08

## ஆசிரியர் ஆர்ப்பாட்டம்

தமிழக உயர் நிலைப் பாடசாலைகளில் பகுதிநேரத் தொழிற்கல்வி ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததில் சுமார் 500 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

தமது ஆசிரியத்தொழிலுக்கு சீரான நிர்வாகச் செயற்திட்டம் வகுக்கப்பட வேண்டுமென நேற்று சென்னைக் கல்வி அலுவலகத்தின் முன் இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது 150 பெண்களும் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## பெண்கள் ஆர்ப்பாட்டம்

52 அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு உண்ணாவிரதம் இருந்த பெண்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியும் தடியடிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது,

ஆபிரிக்க நாடான கென்யாவின் தலைநகர் நைரோபியில் மேற்காட்டிய சம்பவம் இரு தினங்களுக்கு முன்னர் நடந்ததாக அறிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் தாக்குதலினால் ஆர்ப்பாட்டம் செய்த பெண்கள் அணி நிலைகுலையவில்லை என்றும் இவர்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் ஏஜென்சி செய்தி தெரிவித்தது.


## நன்றி நவிலல்

திருமதி மயில்வாகனம் உருக்குமணி

தோற்றம்: 23 - 05 - 1896  மறைவு: 02 - 03 - 1992

96 வயது நிரம்பிய பெரியமதவடி உடுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் உருக்குமணி அவர்கள் சிவபதமடைந்த தினத்தில் சமுகமளித்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றி நவிலலைத் தெரிவிக்கிறோம்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்,  03019

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் நிருவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 06-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது